**குறுவைக் காப்பீட்டுத் தொகையை ஜூலை 31-க்குள் செலுத்தலாம்**

First Published : 11 Jul 2010 01:06:33 PM IST

தஞ்சாவூர், ஜூலை 10: குறுவை சாகுபடி செய்யும் விவசாயிகள் ஜூலை 31-ம் தேதிக்குள் காப்பீட்டுத் தொகையைச் செலுத்தி பயன்பெறலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அந்தத் திட்டத்தின் தஞ்சாவூர் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வ. பழனியப்பன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நிலத்தடி நீரைப் பயன்படுத்தி குறுவை சாகுபடி செய்யும் விவசாயிகள் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் பங்கேற்று பயன்பெறலாம். 2008-ல் நடுக்காவேரி பிர்காவுக்கு ரூ. 33.497 இழப்பீடு வழங்கப்பட்டது. 2009-ம் ஆண்டுக்கு ரூ. 79 லட்சம் இழப்பீடு 9,000 விவசாயிகளுக்கு விரைவில் வழங்கப்படவுள்ளது.

நிகழாண்டில் இந்தத் திட்டத்தில் பயன்பெற பயிர்க் கடன் பெறும் சிறு, குறு விவசாயிகள் ஏக்கருக்கு ரூ. 242, கடன் பெறாதவர்கள் ஏக்கருக்கு ரூ. 218 தவணை செலுத்தி, ஏக்கருக்கு ரூ. 19,000-க்கு பயிர்க் காப்பீடு செய்யலாம். இது சாதாரண மகசூலுக்கான தொகை.

தவிர, பயிர் வளமாக இருந்து, கூடுதல் மகசூல் கிடைக்குமெனில் கூடுதலாக ஏக்கருக்கு ரூ. 12,928 காப்பீடு செய்யலாம்.

மொத்தத்தில் ஏக்கருக்கு ரூ. 32,316-க்கு காப்பீடு செய்ய கடன் வாங்கும் சிறு, குறு விவசாயிகள் மற்றும் இதர விவசாயிகள் ரூ. 469, கடன் வாங்காதவர்கள் ரூ. 422 தவணை செலுத்தலாம்.

தவணையை கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் ஜூலை 31-ம் தேதிக்குள் செலுத்த வேண்டும்.

கடந்த ஆண்டு மழைக் காப்பீட்டுத் திட்டத்தில் தவணை செலுத்திய விவசாயிகள் அனைவரும், யார் மூலம் தொகை செலுத்தினார்களோ அவர்களிடம் தங்களிடமுள்ள ஒப்புதல் கடிதத்தை காண்பித்து காசோலையை பெற்றுக் கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு 94437-80661 என்ற செல்பேசியை தொடர்பு கொள்ளலாம் என்றார் அவர்.

**ஒவ்வொரு துளிநீரிலும் வருமானம் பெருக்குவதே நீர்வள, நிலவள திட்ட நோக்கம்: என்.ராமமூர்த்தி**

First Published : 11 Jul 2010 10:49:15 AM IST

வந்தவாசி, ஜூலை 10: ஒவ்வொரு துளிநீரிலும் அதிக வருமானத்தை பெருக்குவதே நீர்வள நிலவள திட்டத்தின் முக்கிய நோக்கம் என்று திண்டிவனம் எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலைய தலைவர் என்.ராமமூர்த்தி கூறினார்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் சார்பில் நீர்வள நிலவள திட்டம் பற்றிய விளக்க கூட்டம் தெள்ளாரில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் நல்லூர், தெய்யார், கொடியாலம், தெள்ளார் ஆகிய கிராமங்களில் உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் நீர்வள நிலவள திட்டங்கள் பற்றி விளக்கிக் கூறப்பட்டது.

கூட்டத்தில் என்.ராமமூர்த்தி பேசியது:

நீர்வள நிலவள திட்டத்தின் முக்கிய நோக்கம் ஒவ்வொரு துளிநீரிலும் அதிக வருமானத்தை பெருக்குவதும், ஏரிப்பாசன பகுதிகளில் இத்திட்டம் மூலம் நீர் மற்றும் பயிர் உற்பத்தி திறன் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதுதான். உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தில் 8 அரசு துறைகள் ஒன்றிணைந்து விவசாயிகள் பங்கேற்புடன் வேளாண் வளர்ச்சிக்கு செயல்படுகிறது. இத்திட்டத்தில் செம்மைநெல் சாகுபடிக்கு தேவையான விதை, உரம், நடவுக்கான குறியீட்டு கருவி, களைக்கருவி, மருந்துகள் உள்ளிட்டவை இலவசமாக வழங்கப்படுகிறது என்றார்.

திட்ட விஞ்ஞானி அன்புமணி செம்மை நெல் சாகுபடி தொழில்நுட்பம் குறித்து விளக்கினார். திட்ட முதுநிலை ஆராய்ச்சியாளர்கள் சுப்பிரமணி, கோகுலசூரியன், ஒன்றியக்குழு உறுப்பினர் வி.ராமு உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**சின்ன வெங்காயத்தில் அழுகல் நோய்**

First Published : 11 Jul 2010 10:35:40 AM IST

தருமபுரி, ஜூலை 10: சின்ன வெங்காயத்தில் ஏற்படும் அழுகல் நோயை கட்டுப்படுத்துவது குறித்து தருமபுரி மாவட்ட தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் துரைசாமி விளக்கம் அளித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தருமபுரி மாவட்டத்தில், தற்போது பயிரிடப்பட்டுள்ள சிறிய வெங்காயத்தில் அழுகல் நோய்த் தாக்குதல் தெரிகிறது. இது ப்யூசேரியம் ஆக்சிஸ்போரம் எனும் பூஞ்சை மூலமாக ஏற்படுகிறது. நோய்த் தாக்கிய விதைக் காய்களை நேர்த்தி செய்யாமல் நடுவதால், இந்நோய் அதிகளவு ஏற்படும்.

நிலத்தில் ஈரப்பதம் அதிகமாக இருந்தால் இந்த பூஞ்சையின் தாக்குதல் அதிகமாக இருக்கும். எனவே, வெங்காய வயலுக்கு குறிப்பிட்ட இடைவெளியில் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும்.

அதாவது, நிலம் நன்கு காய்ந்த பிறகு நீர்ப் பாய்ச்ச வேண்டும். ஈரத்தன்மை இருக்கும் போது, நீர்ப் பாய்ச்சுவதைத் தவிர்க்க வேண்டும். களிமண் பாங்கான நிலங்களில் 7 முதல் 9 நாள்களுக்கு ஒரு முறையும், மணல் பாங்கான நிலங்களில் 5 நாள்களுக்கு ஒரு முறையும் நீர்ப்பாய்ச்சினால் போதுமானது.

அழுகல் நோய்த் தாக்கிய வெங்காயத் தாள்கள் மஞ்சள் நிறமாக மாறி இருக்கும். நோய் முற்றிய நிலையில் தாள்கள் நேராக இல்லாமல், துவண்டு போய் காணப்படும்.
செடியைப் பிடுங்கிப் பார்த்தால், காயின் வேர் தோன்றும் பாகம் அழுகி நைந்து போனது போல தோன்றும். இந்நோய் தோன்றிய செடிகளை உடனடியாக பிடுங்கி அழித்துவிட வேண்டும். இல்லையெனில், மற்ற செடிகளுக்கும் பாதிப்பை உண்டாக்கும்.
அழுகல் நோயைக் கட்டுப்படுத்தும் முறைகள்:
10 லிட்டர் நீருக்கு கார்பென்டாசிம் பூஞ்சாணக் கொல்லி 10 கிராம் மற்றும் ஸ்டிரெப்டோமைசீன் சல்பேட் 2 கிராம், ஒட்டும் திரவம் 5 மில்லி என்ற வீதத்தில் கலந்து காலை அல்லது மாலை வேளைகளில் வயலில் தெளிக்கலாம். இவ்வாறு செய்வதன் மூலம் வெங்காயத்தில் ஏற்படும் அழுகல் நோயைக் கட்டுப்படுத்தலாம் என்றார் அவர்.

**"வாழைத் தொழில்நுட்பங்கள் விவசாயிகளை அடைவது அவசியம்'**

First Published : 11 Jul 2010 01:15:30 PM IST

திருச்சி, ஜூலை 10: வாழை சாகுபடியில் உள்ள புதிய தொழில்நுட்பங்கள் விவசாயிகளைச் சென்றடைய வேண்டும் என்றார் அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி, ஆராய்ச்சி மைய முதன்மையர் ஜி. கதிரேசன்.

திருச்சி அருகேயுள்ள தேசிய வாழை ஆராய்ச்சி மையத்தில் அண்மையில் நடைபெற்ற உத்தரபிரதேச வேளாண் அலுவலர்களுக்கு வாழை உற்பத்தியை மேம்படுத்துவதற்கான தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி முகாமின் தொடக்க விழாவில் அவர் பேசியது:

"நம் நாட்டில் ஒரு ஹெக்டேரில் சராசரியாக 37.5 டன் வாழை உற்பத்தியாகிறது. இது, உலக அளவின் சராசரி உற்பத்தி அளவை விட 15.4 டன்கள் குறைவு.

சீன நாட்டுடன் ஒப்பிடும்போது, இது 25.4 டன் அதிகம் என்றாலும், தோட்டக்கலைப் பொருள்களின் ஏற்றுமதியில் நம் நாட்டின் பங்கு 0.02 சதம் மட்டுமே.

எனவே, நம் நாட்டின் தோட்டக்கலைப் பொருள்களின் ஏற்றுமதி அதிகரிக்க வேண்டுமானால், நம் நாட்டில் உள்ள அனைத்து ஆய்வு மையங்களிலிருந்து வெளியாகும் தொழில்நுட்பங்கள் விவசாயிகளையும், ஏற்றுமதியாளர்களையும் சென்றடைய வேண்டும்.

மேலும், வாழையில் உயரிய தொழில்நுட்பங்களான திசு வளர்ப்பு வாழை நடவு செய்தல், சொட்டு நீர் உரப்பாசனம், அடர் நடவு முறை, நல்ல தரமுள்ள வாழைக்காய்களை உற்பத்தி செய்தல் போன்றவற்றை விவசாயிகள் பின்பற்றி அதிக மகசூல் பெற வேண்டும்' என்றார் கதிரேசன்.

இதில், தேசிய வாழை ஆராய்ச்சி மைய இயக்குநர் எம்.எம். முஸ்தபா, உத்தரபிரதேச அரசின் வேளாண் துறைத் துணை இயக்குநர் ஏ.பி. ஸ்ரீவாஸ்தவா உள்ளிட்டோர் பேசினர்.

முன்னதாக, முதன்மை விஞ்ஞானி வி.பி. பாண்டே வரவேற்றார். முதுநிலை விஞ்ஞானி கே.என். சிவா நன்றி கூறினார்.

திருவாரூர்

**டெல்டா பாசனத்துக்கு மேட்டூர் அணையை திறக்கக் கோரிக்கை**

First Published : 11 Jul 2010 11:17:36 AM IST

திருவாரூர், ஜூலை 10: டெல்டா பாசனத்துக்கு மேட்டூர் அணையைத் திறக்க உரிய ஏற்பாடுகளை அரசு மேற்கொள்ள கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காங்கிரஸ் சட்டம் மற்றும் மனித உரிமைகள் துறையின் திருவாரூர் மாவட்ட காங்கிரஸ் வழக்குரைஞர்கள் கலந்துரையாடல் கூட்டம் திருவாரூரில் சனிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு காங்கிரஸ் சட்டம் மற்றும் மனித உரிமைகள் பிரிவின் தலைவர் மா. முத்துசாமி தலைமை வகித்தார். திருவாரூர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டித் தலைவர் மன்னை மதியழகன், நகரத் தலைவர் மடப்புரம் எம். சம்பத் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டத் தீர்மானங்கள்:

திருவாரூர் நகரில் புதைசாக்கடைத் திட்டப் பணிகளை உடனடியாக முடிக்க வேண்டும். நீதிமன்றத்தில் நீதிமன்ற ஊழியர்கள் பற்றாக்குறையை சரி செய்ய வேண்டும். மருத்துவக் கல்லூரியை விரைந்து தொடங்க வேண்டும். ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டுமானப் பணிகளை விரைந்து தொடங்க வேண்டும். மின்தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க அரசு உரிய ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் வழக்குரைஞர் ஜி. கார்த்திகேயன், பாலசண்முகம், நாகை ராஜேந்திரன், மாவட்டப் பொருளர் பி. சின்னையன், மதுரை குருசாமி, தஞ்சாவூர் அன்பழகன், சிவா. சத்தியமூர்த்தி உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

**பால் உற்பத்தியாளர்களுக்கு பசுந்தீவன உற்பத்தி பயிற்சி**

First Published : 11 Jul 2010 11:12:18 AM IST

உதகை ஜூலை 10: நீலகிரி மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் சார்பில் பால் உற்பத்தியாளர்களுக்கு பசுந்தீவன உற்பத்தி பயிற்சி அளிக்கப்பட்டது.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 100 சத மானிய அடிப்படையில் நீலகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்ள்ல் ஒன்றியத்தின் மூலம் 178 பயனாளிகளுக்கு பசுந்தீவன உற்பத்தி பயிற்சி அளிக்கப்படுகிறது. இதில் முதற்கட்டப் பயிற்சியாக

உதகையில் புதிய பால் பண்ணை கூட்ட அரங்கில் 35 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் பங்கேற்ற அனைவருக்கும் தீவன சோள விதைகள் மற்றும் பசுந்தீவனக் கன்றுகளை ஆவின் பொது மேலாளர் ஞானகுரு வழங்கினார்.

தொடர்ந்து நீலகிரி மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தின் கால்நடை மருத்துவர் ஜெபராணி மற்றும் மாவட்ட கால்நடை பண்ணையின் கால்நடை மருத்துவர் டாக்டர் முல்லைசெல்வன் ஆகியோர் தலைமையில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

இலாபமாகவும், ஆரோக்கியமாகவும் கால்நடைகளை வளர்த்து இயற்கை வேளாண்மை செய்ய ஆதாரமாக வளரும் தொழு உரம் மற்றும் இதர நல்ல கழிவுப் பொருட்களை உரிய முறையில் சேர்த்து தயாரித்து வழங்க ஏதுவாகவும், ஆதாரமாக உள்ள

பசுந்தீவனம் மற்றும் உலர் தீவன உற்பத்தி தீவன பயிர்களை விஞ்ஞான முறைப்படி சாகுபடி செய்து கால்நடைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் ஆண்டு முழுதும் தேவையை பூர்த்தி செய்யும் வகையிலும் இப்பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளதாக ஆவின் நிர்வாக இயக்குநர் ஞானகுரு தெரிவித்தார்.

**கால்நடை பராமரிப்பு விழிப்புணர்வு முகாம்**

First Published : 11 Jul 2010 09:05:04 AM IST

கும்மிடிப்பூண்டி, ஜூலை 10: கால்நடை பராமரிப்பு குறித்த விழிப்புணர்வு முகாம் கும்மிடிப்பூண்டி அடுத்த ஆத்துப்பாக்கத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது.

ஷேர் பெண்கள் அறக்கட்டளையின் சார்பாக நடைபெற்ற இந்த முகாமில் கால்நடைகளுக்கு ஏற்படும் வியாதிகள் அதை பராமரிக்கும் முறை குறித்து மகளிர் குழுக்களை சேர்ந்த பெண்களுக்கு விளக்கப்பட்டது.

விழாவிற்கு ஆத்துப்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் மணி தலைமை தாங்கினார்.

அறக்கட்டளை நிர்வாகி மேரி ஆக்சீலியா வரவேற்புரை நிகழ்த்தினார்.

இந்த கால்நடை பராமரிப்பு முகாமில் எளாவூர் கால்நடை உதவி மருத்துவர் டாக்டர் வெங்கடரமணன், ஓபசமுத்திரம் கால்நடை உதவி மருத்துவர் டாக்டர் மாரியப்பன், உதவியாளர் பிரபாகரன் ஆகியோர் வகுப்பு எடுத்தனர். பரிமளா மணி நன்றியு கூறினார்.

தினமலர்

**தக்காளி வரத்து குறைவால் தற்போது விலை குறைய வாய்ப்பில்லை**

கோயம்பேடு : கோயம்பேடு மார்க்கெட்டிற்கு ஆந்திரா, கர்நாடகாவில் இருந்து வரும் தக்காளி வரத்து குறைந்துள்ளதால், தற்போதைக்கு தக்காளி விலை குறைய வாய்ப்பில்லை. கோயம்பேடு மார்க்கெட்டிற்கு வெளிமாநிலங்களில் இருந்து தக்காளி வரத்து அதிகம் இருக்கும். குறிப்பாக ஆந்திரா, கர்நாடகாவில் இருந்து தினமும் 70 முதல் 80 லாரிகள் தக்காளி வரத்து இருந்து வந்தது.போதிய விலை கிடைக்காததால் அம்மாநில விவசாயிகள் பலர், தக்காளி பயிரிடுவதை தவிர்த்து வருகின்றனர். இதனால், உற்பத்தி குறைந்து தினமும் 40 லாரிகளில் மட்டுமே அம்மாநிலங்களில் இருந்து தக்காளி வரத்து இருக்கிறது.இதனால், ஒரு கிலோ நாட்டு தக்காளி மொத்த விலையில் 27 ரூபாயும், ஒரு கிலோ பெங்களூரு தக்காளி 27 முதல் 28 ரூபாய் வரை விற்கப்படுகிறது. வரத்து குறைவாக உள்ளதால், தற்போதைக்கு தக்காளி விலை குறைய வாய்ப்பில்லை.இது குறித்து கோயம்பேடு மார்க்கெட் தக்காளி வியாபாரிகள் சங்கத்தலைவர் தியாகராஜன் கூறுகையில்,""வரத்து குறைவாக இருப்பதால் விலை அதிகமாக உள்ளது. நல்ல மழை பெய்து வரத்து அதிகம் இருந்தால் தக்காளி விலை குறைய வாய்ப்புள்ளது,'' என கூறினார்.

**உற்பத்தி குறைவு: மல்லி, புளி விலை "கிடுகிடு'**

பண்ருட்டி : உற்பத்தி குறைவால் மல்லி, புளி விலை கடுமையாக உயர்ந்து வருகிறது.புளி உற்பத்தி கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு குறைவு, ஆந்திரா மாநிலம் புங்கனூர் பகுதியில் புளி தேவைக்கு ஏற்ப விளைச்சல் இல்லை. இதனால் கடந்த ஆண்டை விட ஒரு கிலோவிற்கு 10 ரூபாய் அளவில் புளி விலை உயர்ந்துள்ளது.இதனால் கிருஷ்ணகிரி ஏசி கொட்டை புளி குவிண்டால் 1,900 ரூபாய் முதல் 2,200 ரூபாய் வரையும், தேனி பகுதி புளி 2,300 முதல் 2,500ம், திண்டுக்கல் நத்தம் பகுதி புளி 1,800 முதல் 1,900ம், ஆந்திரா புங்கனூர் பகுதி ஏசி கொட்டை புளி 2,200 ரூபாய்க்கும் விற்பனையாகிறது.கொட்டையில்லாத மதுரை ஏசி ரக கரிப்புளி குவிண்டால் 6,000 முதல் 8,000 வரையிலும், பிளவர் ரக புளி 5,000 முதல் 5,500 வரையிலும், 2ம் ரகம் 4,500 ரூபாயும், கர்நாடக மாநிலம் டூம்கூர் வெள்ளி மடல் ஏசி ரக புளி 7,000 ரூபாயும், நயம் ரக ஏசி கரிப்புளி 6,500ம், மீடியம் ரகம் 5,500ம், மீடியம் ரகம் 4,000 ரூபாயும், சேலம் ஏசி ரக கரிப்புளி 6,000 ரூபாயும்,ஏசி பெஸ்ட் ரக கரிப் புளி 5,500ம், மீடியம் ரக புளி 5,000ம், பிளவர் மீடியம் ரகம் 4,200ம், ஏசி நெ.1 தோசை புளி 5,200ம், தோசை மீடியம் ரகம் 4,800 ரூபாய்க்கும் விற்பனையாகிறது.அதேப்போன்று குஜராத், ராஜஸ்தான், மத்தியபிரதேசங்களில் மழை பெய்து வருவதால் மல்லி வரத்து குறைந்துள்ளது. இதனால் கடந்த மாதம் 40 கிலோ 1,200 ரூபாய்க்கு விற்ற மல்லி தற்போது மூட்டைக்கு 100 முதல் 150 ரூபாய் வரை உயர்ந் துள்ளது.விருதுநகர்,

சாத்தூர், விளாத்திகுளம் ஆவரேஜ் மல்லி 1,250 ரூபாய் முதல் 1,350 ரூபாய் வரையிலும், உருட்டு மல்லி 1,450 முதல் 1,550 வரையிலும், மத்திய பிரதேசம் பாதம் கலர் மல்லி 1,350ம், ராஜஸ்தான் கோட்டா வட்டார கிரீன் மல்லி 1,330 ரூபாயும், குஜராத் பாதாம் நிற மல்லி 1,350 க்கும் விற்பனையாகிறது. இதனால் சில்லரை விற்பனையில் ஒரு கிலோ 35 ரூபாய்க்கு விற்றவை 40 ஆக உயர்ந்துள்ளது.

**சிதம்பரம், காட்டுமன்னார்கோவிலில் பாசன வாய்க்கால் தூர்வாரும் பணி ஆய்வு**

சிதம்பரம் : சிதம்பரம், காட்டுமன் னார்கோவில் பகுதியில் பாசன வாய்க்கால் மற்றும் வடிகால் வாய்க்கால் தூர் வாரும் பணிகளை பொதுப்பணித்துறை அதிகாரிகள் ஆய்வு செய்தனர். சிதம்பரம் மற்றும் காட்டுமன்னார்கோவில் பகுதியில் பொதுப்பணித் துறையின் கீழ் பாசன வாய்க்கால்கள் மற்றும் வடிகால் வாய்க்கால்கள் தூர்வாரும் பணிகள் நடந்து வருகிறது. கடந்த மே மாதம் முதல் 56 பணிகள் 215 கி.மீ., நீளத்திற்கு 2 கோடியே 50 லட்சம் செலவில் நடந்து வருகிறது. சம்பா சாகுபடி மற்றும் மழைக்காலம் துவங்க இருப்பதால் பணிகள் துரிதபடுத்தப்பட்டு இறுதி கட்டத்தை எட்டியுள்ளது.பணிகளின் நிலை குறித்து பொதுப்பணித் துறை சிதம்பரம் செயற் பொறியாளர் செல்வராஜ் தலைமையில் அதிகாரிகள், விவசாயிகள் அடங் கிய குழுவினர் ஒவ்வொரு பகுதிக்கும் சென்று பார் வையிட்டு ஆய்வு செய்தனர். உதவி செயற் பொறியாளர்கள் பெரியசாமி, கலியபெருமாள், உதவி பொறியாளர்கள் சரவணன்.

விவசாய சங்கத் தலைவர்கள் ரவீந்திரன், கண்ணன், இளங்கீரன் உள்ளிட்ட விவசாயிகள் உடன் சென்றனர்.சிதம்பரம் அருகே மாரியப்பா நகர், சந்திரமலை, சித்தலபாடி, பிச்சாவரம் உள்ளிட்ட பகுதிகளுக்குப் பாசனம் பெறும் உப்பனார் பாசனம் மற்றும் வெள்ளக்கால்வாய் 7 கி.மீ., நீளத்திற்கு 19 லட்சம் ரூபாயில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. ஐந்து கிராம மக்கள் பயன் பெறும் வகையில் தூர்வாரப்பட்டுள்ள இப் பணி மூவேந்தர் முன் னேற்றக் கழக தலைவர் ஸ்ரீதர் வாண்டையார், துணை முதல்வர் ஸ்டாலினிடம் வைக்கப்பட்ட கோரிக்கையின் பேரில் செய்யப்பட்டுள்ளது. காட்டுமன்னார்கோவில் வட்டத்தில் "15 பணிகள் 49 கி.மீ., சிதம்பரம் வட்டத்தில் 31 பணிகள் 166 கி.மீ., நீளத்திற்கும் தூர்வாரி முடிக்கப்பட் டுள்ளதாகவும், இந்த பணிகள் முடிவடைந்தால் நீர் பங்கீடு முறை சிறப்பாக நடைபெறும் எனவும், வெள்ள காலங்களில் மழைநீர் விரைந்து வடிவதால் 15 கிராமங்கள் வெள்ள பாதிப்பில் இருந்து தவிர்க்கப்படும்' என செயற்பொறியாளர் செல்வராஜ் தெரிவித்தார்.

**பயிர் காப்பீடு திட்டத்தில் பிரிமியம் செலுத்த வேண்டும் தோட்டக்கலை உதவி இயக்குனர் அறிவிப்பு**

ராசிபுரம்: "நாமகிரிப்பேட்டை வட்டாரத்தில் பயிர் காப்பீடு திட்டத்தில், விவசாயிகள் பிரிமியத் தொகை செலுத்தி பயன்பெறலாம்' என, தோட்டக்கலை உதவி இயக்குனர் மோகன் விஜயகுமார் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:நடப்பு காரிப் பருவத்திற்கு பயிர் காப்பீடு திட்டத்தில் மரவள்ளி, வாழை, வெங்காயம், மஞ்சள் பயிர்கள் நாமகிரிப்பேட்டை வட்டாரத்தில் பதிவு செய்ய அங்கீகரிக்கப்பட்டுள்ளது. வாழை பயிருக்கு ஒரு ஹெக்டேருக்கு காப்பீடு தொகையாக 9 லட்சத்து 79 ஆயிரத்து 110 ரூபாய்க்கு பிரிமியத் தொகை 6.6 சதவீதம் செலுத்த வேண்டும். அதேபோல், மரவள்ளி பயிருக்கு காப்பீடு தொகை 3 லட்சத்து 27 ஆயிரத்து 550 ரூபாய்க்கு பிரிமியத் தொகை 6.2 சதவீதம், வெங்காயத்துக்கு 95 ஆயிரத்து 684 ரூபாய்க்கு பிரிமியத் தொகை 6.2 சதவீதம், மஞ்சள் பயிருக்கு 14 லட்சத்து 42 ஆயிரத்து 360 ரூபாய்க்கு பிரிமியத் தொகை 5 சதவீதம் செலுத்த வேண்டும்.

காப்பீடு திட்டத்தில் பயன்பெற, விதைத்த அல்லது நடவு செய்த ஒரு மாதம் அல்லது நடப்பு ஆண்டு நவம்பர் 30ம் தேதி அதில் எது முந்தியதோ  அந்த தேதிக்குள் வாழை, மரவள்ளி மற்றும் வெங்காயம் ஆகிய பயிர்களுக்கு வங்கி கடன் பெற்ற விவசாயிகள் பதிவு செய்ய வேண்டும். மஞ்சள் சாகுபடி விவசாயிகள் கடன் பெற்றவராக இருந்தால், விதைத்த ஒரு மாதம் அல்லது 2011ம் ஆண்டு மார்ச் 31ம் தேதி அதில் எது முந்தியதோ அந்த தேதிக்குள் பதிவு செய்ய வேண்டும். வங்கியில் கடன் பெற்ற விவசாயிகள் பிரிமியத் தொகையில் 50 சதவீதம் மானியம் போக மீதி தொகையை பிரிமியத் தொகையாக செலுத்த வேண்டும்.வாழை,  மரவள்ளி, மற்றும் வெங்காயம் ஆகிய பயிர்களுக்கு வங்கி கடன் பெறாத விவசாயிகள் பிரிமியம் செலுத்த வரும் அக்டோர் 15ம் தேதி அல்லது பயிர்கள் விதைத்த அல்லது நடவு செய்த ஒரு மாதம், இதில் எது முந்தியதோ அந்த தேதிக்குள்ளும், மஞ்சள் பயிருக்கு 2011ம் ஆண்டு ஜனவரி 31ம் தேதி அல்லது விதைத்த அல்லது நடவு செய்த ஒரு மாதம் அதில் எது முந்தியதோ அந்த தேதிக்குள் பிரிமியம் செலுத்த வேண்டும். வங்கி கடன் பெறாத சிறு, குறு விவசாயிகள் பிரிமியத் தொகையில் 55 சதவீதம் மானியமும், இதர விவசாயிகள் 50 சதவீத மானியமும் போக மீதி தொகையை செலுத்த வேண்டும். மேலும், இது குறித்த விபரங்களுக்கு நாமகிரிப்பேட்டை தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தையோ அல்லது துறை அலுவலர்களையோ அணுகலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**குளித்தலை அருகே விவசாயிகள் கலந்துரையாடல்**

குளித்தலை: குளித்தலை அருகே தண்ணீர்பள்ளி வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் கரூர் மாவட்ட வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை சார்பில் விவசாயிகள் மற்றும் விஞ்ஞானிகளுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சி நடந்தது. வேளாண்மை உதவி இயக்குனர் கந்தசாமி தலைமை வகித்தார். மாநில அரசின் திட்டங்கள் குறித்தும், பயிர் மற்றும் ரகங்கள் குறித்தும், செம்மை நெல் சாகுபடி குறித்தும், நீர் மேலாண்மை குறித்தும், ஒருங்கிணைந்த களை கட்டுப்பாடு குறித்தும், ஒருங்கிணைந்த உர மேலாண்மை குறித்தும் கலந்துரையாடலில் பேசப்பட்டது. விவசாயிகள், உழவர் மன்ற அமைப்பாளர்கள், அன்பில் தர்மலிங்க கல்லூரி மாணவிகள், அரசு அலுவலர்கள் பங்கேற்றனர்.

**மஞ்சள் சாகுபடி இரு மடங்கு அதிகரிப்பு**

பொங்கலூர் : பொங்கலூர் சுற்றுவட்டார பகுதிகளில் மஞ்சள் சாகுபடி பரப்பு, கடந்தாண்டை காட்டிலும் இரு மடங்கு அதிகரித்துள்ளது.கடந்த சில ஆண்டுகளாக மழை குறைவு காரணமாக, தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டது. ஆண்டு முழுவதும் அதிகளவில் தண்ணீர் தேவைப்படுவதால், தண்ணீர் பற்றாக்குறையை சமாளிக்க, விவசாயிகள் குறைந்த அளவே மஞ்சள் சாகுபடி செய்திருந்தனர்.இந்த சீசனில் முதல் மண்டல பாசனத்துக்கு பி.ஏ.பி., கால்வாயில் தண்ணீர் திறந்து விடப்பட்டதால், கிணறுகளில் நீர் வளம் நிரம்பியுள்ளது. விவசாயிகள், கிணற்று நீரை பயன்படுத்தி மஞ்சள் சாகுபடி பரப்பை அதிகரித்துள்ளனர். மஞ்சள் பயிரிடுவது முதல் அறுவடை வரை ஆண்டு முழுவதும் பராமரிப்பு செய்வது கடினமான பணி. மற்ற பயிர்களைப்போல் இதை பராமரித்தால், விளைச்சல் கிடைக்காது. நிலத்தை உழுவது முதல் தொழு உரமிடுவது, நிலத்தில் இருந்து தோண்டியெடுப்பது, பதப்படுத்துவது வரை அதிக பொருட்செலவில் இப்பணி மேற்கொள்ளப்படுகிறது.

அறுவடை துவங்கியது முதல் மஞ்சளுக்கு நல்ல விலை கிடைத்து வந்தது. மஞ்சள் விலை வரலாறு காணாத வகையில் விற்பனையானதால், மஞ்சள் பயிரிட்ட விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைத்தது. இது, மற்ற விவசாயிகளிடமும் மஞ்சள் பயிரிடும் ஆசையை வளர்த்தது. தற்போது மஞ்சள் சாகுபடி செய்யும் பணி 99 சதவீதம் முடிவடைந்து விட்டது. கடந்தாண்டு பயிரிட்டதை காட்டிலும் இரு மடங்கு அதிகமாக பயிர் செய்யப்பட்டுள்ளது.பெரும்பாலான விவசாயிகள்

மார்க்கெட் விலைக்கு விற்பனை செய்து விட்டனர். மஞ்சள் அறுவடை சீசன் முடிந்து விட்ட நிலையில், இன்னும் அதிக விலை கிடைக்கும் என்று எதிர்பார்த்து, சில விவசாயிகள் இருப்பு வைத்துள்ளனர். தற்போது மஞ்சள் மூட்டை, 14 ஆயிரத்து 500 முதல் 15 ஆயிரம் ரூபாய் வரை விலை போகிறது.

**கரும்பு அறுவடைக்கு உள்ளூர் ஆட்கள் கிடைக்காததால் பற்றாக்குறை**

பொள்ளாச்சி : ஆனைமலை பகுதியில், கரும்பு அறுவடை துவங்கியுள்ள நிலையில், உள்ளூரில் ஆட்கள் பற்றாக்குறையாக உள்ளதால், கர்நாடகா மற்றும் வட மாநிலங்களிலிருந்து குடும்ப சகிதமாக ஆட்கள் அழைத்து வந்து பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இதனால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.பொள்ளாச்சி பகுதியில், ஆனைமலை சுற்றுப்பகுதிகளான சுப்பேகவுண்டன்புதூர், தாத்தூர், அம்பராம்பாளையம், கோட்டூர் ரோடு செல்லும் பகுதிகளில், ஆயிரம் ஏக்கர் பரப்பில் கரும்பு பயிரிடப்பட்டுள்ளது. இங்கு, அறுவடையாகும் கரும்பு, உடுமலை உட்பட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள சர்க்கரை ஆலைகளுக்கு அரவைக்காகவும், கேரளாவுக்கு, வெல்லம் உற்பத்திக்காவும் அனுப்பப்படுகிறது.சர்க்கரை ஆலைகளுக்கு 60 சதவீதமும், வெல்லம் உற்பத்திக்கு 30 சதவீதமும் கரும்பு பயன்படுத்தப்படுகிறது. மீதமுள்ள 10 சதவீதம் விற்பனைக்காக அனுப் பப்படுகிறது.இந்நிலையில், ஆனைமலை பகுதியில் கடந்த சில ஆண்டுகளாக அறுவடைக்கு உள்ளூரில் கூலியாட்கள் கிடைப்பது குதிரைக்கொம்பாகியுள்ளது. இதனால், கேரளா, கர்நாடகா மாநிலங்களிலிருந்து ஆட்களை அழைத்து வந்து அறுவடை பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போது, கேரளப்பகுதிகளிலும் கூலியாட்கள் பற்றாக்குறையாக உள்ளதால், கர்நாடகா மாநிலத்திலிருந்தும், மகாராஷ்டிரா, ஒரிசா உள்ளிட்ட வட மாநிலங்களிலிருந்தும் குடும்ப சகிதமாக ஆட்கள் வரவழைத்து கரும்பு அறுவடை மேற்கொள்ளப்படுகிறது.ஆனைமலை சுற்றுப்பகுதிகளில், தற்போது கரும்பு அறுவடை துவங்கியுள்ளது. இதற்காக, கர்நாடகா மாநிலம் பெல்காம், கொல்லேகால் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து ஆட்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர். உள்ளூர் கூலியாட்களுக்கு வழங்குவதை காட்டிலும், வெளி மாநில ஆட்களுக்கு கூடுதல் சம்பளம் வழங்க வேண்டியுள்ளதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். ஆனைமலை பகுதி விவசாயிகள் கூறியதாவது:தமிழக - கேரள எல்லைக்கு அருகில், ஆனைமலை சுற்றுப்பகுதிகள் உள்ளதால் இப்பகுதியில் கரும்பு அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளது. ஆனால், அறுவடைக்கு ஆட்கள் பற்றாக்குறையாக உள்ளது. உள்ளூர் பகுதி கூலியாட்கள், அரசின் வேலை உறுதி திட்டத்திற்கு

சென்றுவிடுகின்றனர். சில தொழிலாளிகள் மாற்று தொழிலுக்கு மாறி வருகின்றனர். இதனால், சில ஆண்டுகளாகவே கூலியாட்கள் கிடைப்பது குதிரை கொம்பாகியுள்ளது. தற்போது, கூலியாட்கள் பற்றாக்குறை பிரச்னை அதிகரித்துள்ளது.

உள்ளூரில் ஒருவர் கூட கிடைக்காத நிலை உள்ளது.இதனால், வெளி மாநில கூலியாட்களை அழைத்து வரவேண்டியுள்ளது. வெளிமாநிலத்திலிருந்து கூலியாட்கள் குடும்ப சகிதமாக வருகின்றனர். இவர்களுக்கு நாளொன்றுக்கு உணவு, தங்கும் இடம், கூலி உட்பட 350 ரூபாய் வழங்க வேண்டியுள்ளது. உள்ளூர் கூலியாட்கள் பயன்படுத்தினால், 250 ரூபாய் வரை மட்டுமே செலவாகும். கூலி அதிகமாக வழங்குவதால், அதிக செலவாகிறது. அதற்கேற்ப லாபம் கிடைப்பதில்லை. இது குறித்து அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போதுதான், பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும்.இவ்வாறு, விவசாயிகள் கூறினர். சாகுபடி பரப்பு குறைந்தது: ஆனைமலை சுற்றுப்பகுதிகளில், கரும்பு மற்றும் நெல் அதிகளவில் பயிரிடப்படும்.

சமீப காலமாக கூலியாட்கள் கிடைக்காததால், விவசாயிகள் சாகுபடி பரப்பை குறைத்து வருகின்றனர். இரண்டாண்டுகளுக்கு முன் ஆயிரத்து 500 ஏக்கர் பரப்பில் கரும்பு பயிரிடப்பட்டு வந்தது.ஆனால், தற்போது ஆயிரம் ஏக்கராக சுருங்கி விட்டது. இதே நிலை நீடித்தால், கால போக்கில் சாகுபடி பரப்பு மேலும் குறையும் வாய்ப்புள்ளது. எனவே, அரசின் வேலை திட்டத்தின் கீழ் விவசாய பணிகளையும் இணைத்து, உள்ளூர் பணியாளர்களை விவசாய பணிகளில் ஈடுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது விவசாயிகளின் கோரிக்கை.

**வீரிய ஒட்டுரக விதை நெல் சப்ளையில் தனியார்கள் விதைகளின் ஆதிக்கம், கவனமாக இருக்க அறிவுரை**

தேனி: வீரிய ரக நெல் விதைகளை அதிகம் பயன்படுத்துவதில் தனியார்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். விதை கொள்முதல் செய்யும் விவசாயிகள் கவனமாக இருக்க வேண்டும் என விவசாயத்துறை அறிவுறுத்தி உள்ளது. தேனி மாவட்டத்தில் தற்போது நெல் விதைப்பு பணிகள் நடந்து வருகின்றன. விவசாயத்துறை சார்பில் ஏ.டி.டி., 36, ஐ.ஆர்., 50 ரக அரிசி விதைகள் சப்ளை செய்யப்பட் டுள்ளது. ஆனால் மாவட்டத்தில் உள்ள மொத்த விவசாயிகளில் 17 சதவீதம் பேருக்கு மட்டுமே விவசாயத்துறை விதை சப்ளை செய்துள்ளது. மீதம் 83 சதவீத விவசாயிகள் வெளிமார்க்கெட்டில் தனியாரிடம் விதை வாங்கி உள்ளனர். பெரும்பாலான விவசாயிகள் வீரிய ஒட்டுரக விதைகளையே வாங்கி உள்ளனர்.

இந்த ரக விதைகளில் இருந்து மீண்டும் விதைகளை பெற முடியாது. ஒரு முறை விதைத்து அதற்குரிய விளைச்சலை மட்டுமே பெற முடியும். இருப்பினும் விவசாயிகள் வெளிமார்க்கெட் விதைகளையே வாங்கி உள்ளனர்.இதனால் விதை நெல் விற்பனையில் தனியார்களின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. இவர்கள் விற்ற விதைகள் அனைத்தும் தரமானது என்பதற்கான உறுதி எதையும் அளிக்க முடியாது. தரமற்ற விதைகள் என்றும் கூறி விட முடியாது. ஒவ்வொரு விவசாயிகளும் வெவ்வேறு கம்பெனிகளில் இருந்து விதை நெல் வாங்கி உள்ளனர்.

இதனால் இதன் பலன் என்ன என்பது விளைச்சல் கிடைத்த பின்னரே தெரியவரும். வழக்கமாக விதை நெல் மட்டும் விவசாயிகள் பயன்படுத்தி வருவார்கள். இம் முறை இது வரை இல்லாத அளவுக்கு வெளிமார்க்கெட்டில் வீரிய ரக விதைகளை பயன்படுத்தி உள்ளனர். இதனால் விளைச்சல் எப்படி இருக்குமோ என விவசாயத்துறை குழப்பத்தில் உள்ளது.

**பெரியாறு அணையில் மழை நீர்மட்டம் மீண்டும் உயர்வு**

கூடலூர்: பெரியாறு அணை நீர்பிடிப்பில் பெய்த கன மழையால் அணையின் நீர்மட் டம் உயரத் துவங்கியுள்ளது. நேற்று முன்தினம் நீர்மட்டம் 116.10 அடியாக இருந்தது. இரவு பெய்த கன மழையால் அணைக்கு நீர்வரத்து 1223 கன அடியாக அதிகரித்து நீர்மட்டம் உயர்ந்து நேற்று காலை நிலவரப்படி 116.40 அடியாக இருந்தது. தமிழகப்பகுதிக்கு 600 கன அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது. நீர் இருப்பு 1979 மில்லியன் கன அடியாகும். பெரியாறில் 57.2 மி.மீ., தேக்கடியில் 20 மி.மீ., மழை பதிவானது. தொடர்ந்து அணைக்கு நீர்வரத்து அதிகமாக இருப்பதால் நீர்மட்டம் மேலும் உயரும் வாய்ப்புள்ளது.

**நெல்கொள்முதல் மையம் விவசாயிகள் கோரிக்கை**

தேவதானப்பட்டி: மேல்மங்கலத்தில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும் என விவசாயிகள் கலெக்டரிடம் மனுக்கொடுத்துள்ளனர். மேல்மங்கலத்தில் பெரியகுளம் வராகநதியில் வரும் நீரை வடுகபட்டி வெள்ளக்கரடு அணை அருகே தடுப்பணை கட்டி ராஜவாய்க்கால் மூலம் நீர் கொண்டு சென்று ஆயிரம் ஏக்கர் பரப்பில் முதலாம், இரண்டாம்போக நெல் சாகுபடி நடந்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் அறுவடைசெய்த நெல்லை தனியார் வியாபாரிகள் விவசாயிகளிடம் குறைந்த விலைக்கு வாங்கிச் செல்கின்றனர். நெல்லை வாங்கும் இவர்கள் பணம் தருவதற்கு மூன்று மாதம் தவணை கேட்கின்றனர். இருந்தபோதும் உரிய நேரத்தில் பணம் கிடைக்கவில்லை. மேல்மங்கலத்தில் நெல் கொள்முதல் மையம் அமைக்க கலெக்டர்

முத்துவீரனிடம் விவசாயிகள் சார்பில் மனுகொடுக்கப்பட்டுள்ளது. வராகநதி ராஜவாய்க்கால் விவசாயிகள் சங்க தலைவர் வெங்கடசுப்பிரமணியன் கூறியதாவது; இரண்டாம் போகம் நெல் சாகுபடி நடந்து 650 ஏக்கர் பரப்பளவில் அறுவடைக்கு தயாராக இருக்கிறது. மேல்மங்கலத்தில் புதிய நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும். இதன் மூலம் மேல்மங்கலம், ஜெயமங்கலம், சில் வார்பட்டி உட்பட 15 கிராம விவசாயிகள் பயன் பெற முடியும். இதற்கு மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

**உதவி பொறியாளர் இல்லாமல் காமாட்சிபுரம் விவசாயிகள் தவிப்பு**

தேனி: காமாட்சிபுரம் துணை மின் நிலையத்தில் உதவிப்பொறியாளர் இல்லாததால் விவசாயிகள் பல்வேறு பிரச்னைக்கு உள்ளாகின்றனர். சின்னமனூர் அருகே காமாட்சிபுரம் துணை மின்நிலையத்தில் உதவி பொறியாளர் பணியிடம் நீண்ட நாட்களாக காலியாகவே உள்ளது. ஓடைப்பட்டி துணை மின்நிலைய உதவி பொறியாளர் பொறுப்பு பணிகளை கவனித்து வருகிறார். இவர் பெரும்பாலான நேரங்களை ஓடைப்பட்டியில் செலவிடுகிறார். ஓரிரு மணி நேரங்கள் மட்டுமே காமாட்சிபுரம் துணை மின்நிலையம் வருகிறார். அதுவும் எப்போது இந்த உதவி பொறியாளர் வந்து செல்வார் என்பதே யாருக்கும் தெரியவில்லை. இதனால் மின் இணைப்பு பெறுதல், மாறுதல் பெறுதல், பழுதான இணைப்புகள் குறித்து புகார் செய்தல், குறைகளை நிவர்த்தி செய்தல் உட்பட பல்வேறு பணிகளுக்கு வரும் விவசாயிகள் உதவி பொறியாளரை சந்திக்க முடியாமல் பல மணி நேரம் காத்துக்கிடக்க வேண்டி உள்ளது. உதவி மின்பொறியாளர் எப்போது வருவார் என இங்குள்ள பணியாளர்களும் தெரிவிப்பது இல்லை. இதனால் விவசாயிகள் வேறு பணிகளை செய்ய முடியாமல் மின்வாரிய அலுவலகத்திலேயே காத்து கிடந்து மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.

**சரிவு தொடர்ந்தாலும், பசுந்தேயிலைக்கு...ஆறுதல் விலை**

குன்னூர்:குன்னூர் தேயிலை ஏல மையத்தில் விலை சரிவு தொடர்ந்தாலும், பசுந்தேயிலைக்கு ஆறுதலான விலை கிடைத்துள்ளது; சராசரி விலை, கடந்தாண்டை ஒப்பிடுகையில் கணிசமாக குறைந்துள்ளது.குன்னூர் தேயிலை ஏல மையத்தில் விற்பனை எண் 27க்கான ஏலம் நடத்தப்பட்டது; மொத்தம் 16.84 லட்சம் கிலோ தேயிலைத் தூள் விற்பனைக்கு இருந்தது; இலை ரகம் 11.67 லட்சம் கிலோ, டஸ்ட் ரகம் 5.17 லட்சம் கிலோ அடங்கும்.

உள்நாட்டு வர்த்தகத்தை பொறுத்தவரை, வழக்கமாக பங்கேற்கும் ஆந்திரா, கர்நாடகா, குஜராத், பஞ்சாப் மாநில வர்த்தகர்களின் பங்களிப்பு இந்த வாரமும் குறைவாகவே இருந்தது; தரமான தேயிலையை மட்டும், அதுவும் குறைந்தளவு வாங்கினர்.தொடரும் தேக்கம்: ஏற்றுமதி வர்த்தகத்தை பொறுத்தவரை, பாகிஸ்தான், ரஷ்ய நாட்டு வர்த்தகர்களின் பங்களிப்பு திருப்தியளிக்கும் வகையில் இருந்தது; பொதுவாக, விற்பனை களைகட்டவில்லை. இதனால், அனைத்து ரக தூளின் விலையும் 2 ரூபாய் சரிந்தது. விற்பனைக்கு வந்த மொத்த தேயிலைத் தூளில் 30 சதவீதம் தேங்கியது.

சி.டி.சி., ரகத்தில், தர்மோனா தொழிற்சாலை வழங்கிய தூளுக்கு, அதிகபட்சம் கிலோவுக்கு 144 ரூபாய் விலை கிடைத்தது; 35க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் 100 ரூபாய்க்கு மேல் விலை பெற்றன. ஆர்தோடக்ஸ் ரகத்தில், சாம்ராஜ் தேயிலைத் தொழிற்சாலை வழங்கிய தூளுக்கு 165 ரூபாய் விலை கிடைத்தது; 25க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் 100 ரூபாய்க்கு மேல் விலை பெற்றன.விலை நிலவரத்தை பொறுத்தவரை, கடந்த வார ஏலத்தை ஒப்பிடுகையில் பெரிய அளவிலான வித்தியாசம் தென்படவில்லை.

இலை ரகத்தில், சாதாரண ரக தூளின் விலை 34-39 ரூபாய், சிறந்த ரக விலை 80 - 115 ரூபாயாக இருந்தது; டஸ்ட் ரகத்தில், சாதாரண ரக விலை 34 - 40, சிறந்த ரக விலை 90- 134 ரூபாயாக இருந்தது.குறைந்தும், எகிறியது விலை: தேயிலைத் தூளின் குறைந்தபட்ச விலை கிலோவுக்கு 40 ரூபாய்க்கு மேல் இருந்தது. சில வாரங்களாக இது படிப்படியாக குறைந்து, தற்போது 34 ரூபாயாக சரிந்துள்ளது. கடந்த வாரமும் தேயிலை ஏலத்தில் இதே போன்று மந்தநிலை நிலவியது. பசுந்தேயிலை வழங்கிய விவசாயிகளுக்கு கிலோவுக்கு 4 - 5 ரூபாய் மட்டுமே விலையாக வழங்கப்பட்டது; பல தொழிற்சாலைகள் 4 ரூபாய் முன்பணமாக வழங்கின. இதனால், விவசாயிகள் அதிருப்தியடைந்தனர்.

ஆனால், இந்த வாரம் விலை சரிவு தென்பட்ட போதிலும், பசுந்தேயிலைக்கு கிலோவுக்கு 7 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது, ஆறுதல் அளித்துள்ளது.விற்பனை எண் 28க்கான ஏலம், வரும் 15, 16ம் தேதிகளில் நடத்தப்படுகிறது; மொத்தம் 18.35 லட்சம் கிலோ தேயிலைத் தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது; இலை ரகம் 12.77 லட்சம் கிலோ, டஸ்ட் ரகம் 5.58 லட்சம் கிலோவும் அடங்கும். இது, கடந்த ஏலத்தை விட 1.51 லட்சம் கிலோ அதிகம்.சரிந்த சராசரி விலை: குன்னூர் தேயிலை ஏலத்தில் விற்கப்பட்ட தேயிலை தூளின் சரா சரி விலை கிலோவுக்கு 50 ரூபாயாக இருந்தது; கடந்தாண்டு இதே காலகட்டத்தில் சரா சரி விலை கிலோவுக்கு 78 ரூபாயாக இருந்தது.

இதனால், தேயிலை வர்த்தகம் மூலம் கிடைக்கும் வருமானம், கடந்தாண்டை விட இந்தாண்டு குறையும் என எதிர்பார்க்கப் படுகிறது.

**நீரோடையாக மாறும் ஆறுகள்: விவசாயிகள் கவலை**

ஊட்டி:பருவமழை தாமதமாகி வருவதால், ஆறுகள், நீரோடையாக உருமாறி வருகின்றன; காய்கறி விவசாயிகள் கவலையில் உள்ளனர்.நீலகிரி மாவட்டத்தில், பருவமழையில் தாமதம் ஏற்பட்டு வரும் நிலையில், புயல் சின்னத்தின் போது மட்டுமே மழை பெய்கிறது. மாவட்டத்தில் உள்ள அணைகளின் நீர் மட்டம் குறைந்துள்ளது. மின் உற்பத்தியிலும், மக்களுக்கான நீர் வினியோகத்திலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

ஆற்றுப் படுகையோரம் விவசாய நிலங்களை வைத்துள்ள விவசாயிகளுக்கு, ஓரளவு நீர் கிடைத்தாலும், மேடான பகுதிகளில் நிலம் வைத்துள்ளவர்கள், பருவமழையை மட்டுமே நம்பியுள்ளனர். மழை தவறும் பட்சத்தில், நஷ்டம் ஏற்படும் அபாயம் உள்ளது. மாவட்டத்தில் உள்ள அணைகளுக்கு நீர் கொண்டு செல்லும் பெரும்பாலான ஆறுகள் ஓடைகளாக மாறியுள்ளன. இத்தலார் அருகே போர்த்தியாடா பகுதியில் உள்ள முக்கிய ஆறு வறண்டு, ஓடையாக உருமாறியுள்ளது. பருவமழை பெய்தால் மட்டுமே, இந்நிலை மாறும்.

**ஒட்டுரக காய்கறிகள், திசுவாழை சாகுபடி**

மதுரை: ""ஒட்டுரக காய்கறிகள், திசுவாழைக்கு சொட்டு நீர்ப்பாசனம் மூலம் சாகுபடி செய்ய மானியம் வழங்கப்படுகிறது,'' என கிழக்கு யூனியன் தோட்டக் கலை அதிகாரி காமராஜ்தெரிவித்துள்ளார்.தமிழகத்தில் தோட்டக்கலைத் துறை மூலம் துல்லிய பண்ணைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மதுரை கிழக்கு யூனியனில் இத்திட்டத்தில் வீரிய ஒட்டுரக காய்கறிகளும், திசு வாழையும் முக்கிய பயிர்களாக அறிமுகம் செய்யப்பட்டன. இத்திட்டத்தில் இரண்டரை ஏக்கர் பரப்பு ஒரு யூனிட்டாக கொண்டு, தனியாகவோ, கூட்டாகவோ பயன்பெறலாம். சொட்டு நீர்ப்பாசனம் அமைத்திட ஒரு யூனிட்டுக்கு அதிகபட்சம் ரூ. 80 ஆயிரம் மதிப்பீடு செய்து, ரூ. 48ஆயிரத்து 640 மானியமாக அளிக்கப்படும். விவசாயிகள் பயிர் செய்யும் காய்கறி, திசுவாழைக்கு சொட்டு நீர்ப்பாசன கருவியின் மூலம் உரம் அளிக்க, நீரில் கரையும் உரம் ரூ. 15 ஆயிரம் மதிப்பில் மானியமாக வழங்கப்படும்.

மொத்தம் ஒரு எக்டேர் பரப்பில் திட்டம் செயல்பட அரசு ரூ. 63 ஆயிரத்து 640 மானியமாக வழங்குகிறது. சொட்டு நீர்ப்பாசனம் மூலம் வீரிய ஒட்டுக்காய்கறிகள், திசுவாழைபயிரிடும்போது, மகசூல் இருமடங்கு அதிகரிக்கும். சீரான பயிர்வளர்ச்சியுடன், ஒரே சமயத்தில் அறுவடைக்கும் பயிர்கள்தயாராகும். பழங்கள், காய்கறிகள் ஒரே மாதிரி தரத்தில் பளபளப்புடன் இருக்கும். உரம், நீர்ச் சிக்கனமாக பயன்படுகிறது. களைகள் கட்டுக்குள் இருக்கும். பயிரின் வளர்ச்சி பருவத்தை நீட்டித்தும் கூடுதல் பலன்பெறலாம். அதிகளவில் ஊடுபயிர்கள் சாகுபடி செய்யலாம். ஆண்டு முழுவதும் திட்டமிட்டு பயிர்செய்யலாம்.
திட்ட மானியம் பொதுப் பிரிவு விவசாயிகளுக்கும், ஆதிதிராவிடர்களுக்கும் தனித்தனி ஒதுக்கீடாக பெறப்பட்டுள்ளது. இதனால் அனைத்து விவசாயிகளும் பலன் பெறலாம்.

கூட்டுக் கிணறுள்ள விவசாயிகள் கூட்டாகவும் மானியம் பெறலாம். சொட்டு நீர்ப்பாசனம் அமைத்தால் இரண்டரை ஏக்கர் பயிர்செய்ய தினமும் ஒரு மணி நேரம் மின்சாரம் இருந்தால் போதும். இதனால் முறை தண்ணீர் தள்ளிப்போகாமல் தினமும் தண்ணீர் பாய்ச்சும் வாய்ப்பு உள்ளது. பதிவுபெற்ற, ஒத்தி எழுதி விவசாயம் செய்பவரும் பயனாளிகளாக சேரலாம். ஆர்வமுள்ளோர், தங்கள் நிலஉரிமை ஆவணங்களான சிட்டா, அடங்கல், ரேஷன்கார்டு, போட்டோ ஆகியவற்றுடன், மதுரை கிழக்கு யூனியனில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குனரை சந்தித்து பதிவு செய்ய வேண்டும். இதுபற்றிய விபரம் அறிய, 98652 80167ல் தொடர்பு கொள்ளலாம்.

**"தென்மேற்கு பருவமழையால் பலனில்லையே' : விரக்தியில் விவசாயிகள்**

மதுரை: தொடர்ந்து 2 ஆண்டுகளாக தென்மேற்கு பருவமழை பொய்த்துப் போனதால், இருபோக சாகுபடி விவசாயிகள் கவலையில் உள்ளனர்.
பெரியாறு, வைகை அணையை நம்பி பல ஆயிரம் ஏக்கர் நிலங்கள் உள்ளன. சமீபத்தில் தென்மேற்கு பருவமழை பெய்ததால் கம்பம் பள்ளத்தாக்கு பகுதிக்கு பெரியாறு அணையில் நீர் திறந்து விடப்பட்டது. அதேபோல மதுரை மாவட்டத்தில் கள்ளந்திரி பகுதி வரையிலான 10 ஆயிரம் ஏக்கர் இருபோக சாகுபடி நிலங்களுக்கு முதல்போக சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விடப்பட வேண்டும். இதற்கு பெரியாறு, வைகை பங்கீட்டு தண்ணீர் இரு அணைகளிலும் 4 ஆயிரம் மில்லியன் கனஅடி அளவிற்கு இருக்க வேண்டும். உரிய நேரத்தில் தென்மேற்கு பருவமழை துவங்கினாலும், மாதாந்திர மழையளவைவிட வெகு குறைவாகவே மழை பெய்துள்ளது. அணைகளுக்கும் தேவையான அளவு நீர் வரத்து இல்லை. இதனால் பெரியாறு,

வைகை அணைகளில் தண்ணீர் குறைந்தளவாக 1075 மில்லியன் கனஅடி அளவிற்கே உள்ளது. ஜூன் முதல் தேதிக்கு திறந்துவிட வேண்டிய நிலையில், 38 நாட்கள் ஆகியும் தண்ணீர் திறந்துவிடாததால், விவசாயிகள் சாகுபடி பணிகளை மேற்கொள்ள முடியவில்லை. செல்லம்பட்டி, சேடபட்டி, வாலாந்தூர், கருமாத்தூர் பகுதிகளில் கிணறு வசதி உள்ள விவசாயிகள் மட்டும் 372 எக்டேர் அளவிற்கு நெல் பயிரிட்டு சாகுபடி செய்கின்றனர்.

மதுரை மாவட்டத்தில் கடந்த ஆண்டும் முதல்போக சாகுபடியின் போது இதே நிலைதான் இருந்தது. கடந்த ஆண்டு முதல்போக சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்படவே இல்லை. இந்த நிலை இந்த ஆண்டும் நீடித்தால் செப்டம்பர், அக்டோபரில் வடகிழக்கு பருவமழை வந்துவிடும். அதன் பின் இரண்டாம் போக சாகுபடியையே நேரடியாக மேற்கொள்ள வேண்டியிருக்கும் என விவசாயிகள் வருத்தம் தெரிவித்தனர். வடகிழக்கு பருவமழை துவங்கும் வரையுள்ள காலகட்டத்தில் தங்கள் நிலங்களை "சும்மா' வைத்திருக்காமல் சிறுதானியங்கள், பயறு வகைகளை சாகுபடி செய்யலாம். அவ்வப்போது பெய்யும் மழையால் அவை மகசூலை தரலாம். 60 முதல் 70 நாட்களில் இதில் மகசூல் பார்த்துவிடலாம் என்பதால், பருவமழைக்கு முன் ஓரளவு வருமானம் கிடைத்து விட வாய்ப்புள்ளது.

**தரமான உரங்கள் கிடைக்கவில்லை விவசாயிகள் சங்கம் குற்றச்சாட்டு**

ஜூலை 12,2010,00:00 IST

காரைக்கால் : காரைக்கால் விவசாயிகளுக்கு தரமான உரங்கள் கிடைக்க வகை செய்யாவிட்டால் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக காரைக்கால் பிரதேச விவசாயிகள் சங்கத் தலைவர் கூறி உள்ளார்.இது குறித்து சங்கத் தலைவர் ராஜேந்திரன் நிருபர்களிடம் கூறியதாவது:வேளாண் துறையின் கீழ் பாசிக் நிறுவனம் இயங்கி வருகிறது. விவசாயிகளுக்கு இடு பொருட்களை வழங்குவதும், விவசாயப் பொருட் களை சந்தைப்படுத்துவதே இதன் முக்கிய பணி. தற்போது பாசிக் நிறுவனம் இப் பணிகளை காரைக்காலில் செம்மையாக செய்வதில்லை. காரைக்கால் விவசாயிகள் கடந்த காலத்தில் தரமான டி.ஏ.டி., யூரியா, பொட்டாஷ் உள்ளிட்ட தரமான உரங்களை பயன்படுத்தி வந்தனர்.கடந்த 2 ஆண்டுகளாக இந்த உரங்கள் காரைக்காலில் கிடைக்கவில்லை.

இரண்டாம் தரமான உரங் களான பாரம்பாஸ், 20-20-20 ஆகிய உரங்களே விவசாயிகளுக்கு வழங் கப்படுகிறது. முன்பு, தமிழக விவசாயிகள் புதுச்சேரி, காரைக்கால் வந்து தரமான உரங்களை வாங்கிச் சென்றனர்.

தற்போது காரைக்கால் விவசாயிகள் தரமான உரத்திற்காக அலைய வேண்டி உள்ளது. தரமற்ற உரங் களை பயன்படுத்துவதால் உற்பத்தி குறைகிறது. பூச்சிகளும் இறப்பதில்லை. இது குறித்து பல முறை புகார் கூறியும் எந்தவித நடவடிக்கையும் இல்லை.2006ம் ஆண்டு வரை பாசிக் நிறுவனம் 3 கோடி ரூபாய் லாபம்ஈட்டியது. அதன் பின் தேவைக்கு அதிகமாக ஆட்களை நியமித்து அவர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாமலும், உரத் தொழிற்சாலைகளுக்கு உரத்திற்கான பணத்தை கொடுக்க முடியாமலும் திணறி வருகிறது.முதல்வர், விவசாயிகள் பிரச்னைகளை உணர்ந்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இதே நிலை தொடரும் பட்சத்தில் விவசாய சங்கத்தினர் சேர்த்து போராட்டத்தில் ஈடுபட முடிவு செய்துள்ளோம்.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**அதிகளவில் பிடிபடும் மத்தி மீன்கள் விலை போகாததால் கருவாடாக மாற்றம்**

ஜூலை 12,2010,00:00 IST

காரைக்கால் : காரைக்காலில் அதிகளவில் பிடிபடும் மத்தி மீன்களை கோழி தீவனத்திற்காக கருவாடாக காய வைக் கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. காரைக்கால் கடல் பகுதியில் மத்தி மீன் சீசன் மார்ச் மாதம் துவங்கி ஆகஸ்ட் மாதம் வரை நீடிக்கும். இந்த காலத்தில் கடலில் 5 முதல் 10 கிலோ மீட்டர் தூரத்தில், இதற் கென தயாரிக்கப்பட்ட விஷேச வலையைக் கொண்டு மத்தி மீன் களை பிடிப்பர். கடலில் குறைந்த தொலைவிலேயே டன் கணக்கில் மத்தி மீன்கள் கிடைப்பதால் மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.மத்தி மீன்களை கேரள மாநில மக்கள் விரும்பி சாப்பிடுவர் என்பதால், காரைக்காலில் பிடிக்கப்படும் மத்தி மீன்கள் கேரளாவிற்கே டன் கணக்கில் அனுப்பப்பட்டு வந்தது. துவக்கத்தில் ஒரு டன் மத்தி மீன் 3000 முதல் 5000 ரூபாய் வரை வியாபாரிகளிடம் விற்பனை செய்யப்பட்டது. தற்போது கேரளாவில் மத்தி மீன் சீசன் துவங்கி விட்டதால், கேரள வியாபாரிகள் தமிழகம் மற்றும் காரைக்காலில் பிடிக்கப்படும் மத்தி மீன்களை வாங்க ஆர்வம் காட்டுவதில்லை.

காரைக்காலில் பிடிக்கப்பட்டு விலை போகாத மத்தி மீன்களை காய வைத்து கருவாடாக்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. மத்தி கருவாடு ஒரு டன் 5000 முதல் 10 ஆயிரம் ரூபாய் வரை விற்கப்படுகிறது. மத்தி கருவாடு கோழிகளுக்கு தீவனமாக பயன்படுத்தப்படுகிறது. தமிழகத்தில் நாமக்கல், பல்லடம், ராசிபுரம் உள் ளிட்ட இடங்களில் உள்ள கோழிப் பண்ணை உரிமையாளர்கள், வியாபாரிகள் மத்தி கருவாடுகளை டன் கணக்கில் வாங்கிச் செல்கின்றனர். மத்தி கருவாட்டுடன் தவிடு மற்றும் குருணை உள்ளிட்ட பொருட்களை சேர்த்து மாவு போன்று அரைத்து கோழிகளுக்கு தீவனமாக வழங்குகின்றனர்.காரைக்காலில் இருந்து நாள் ஒன்றுக்கு 5 டன் மத்தி கருவாடு தமிழகத்தின் பல பகுதிகளுக்கு அனுப் பப்படுகிறது. காரைக்கால் மேடு, கிளிஞ் சல்மேடு, மண்டபத்தூர் உள் ளிட்ட 11 மீனவ கிராமத்தில் மத்தி மீன் களை கருவாடாக்கும் பணியில் மீனவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**கரும்பு, பருப்பு வகைகள் விளைச்சல் அதிகரிப்பால்சர்க்கரை, துவரம் பருப்பு விலை குறைந்தது பூண்டு, புளி விலை உயர்வு**

*சென்னை, ஜூலை 12–*
*கரும்பு, பருப்பு வகைகள் விளைச்சல் அதிகரிப்பால் சர்க்கரை கிலோ ரூ.29 ஆகவும், துவரம் பருப்பு ரூ.65 ஆகவும் விலை குறைந்துள்ளது. அதே நேரத்தில் பூண்டு, புளி விலை அதிகரித்துள்ளது.*

*சர்க்கரை விலை குறைவு*

*கடந்த மாதம் இந்தியாவில் உள்ள மில்களுக்கு 17 லட்சம் டன் சர்க்கரையை மத்திய அரசு ஒதுக்கி இருந்தது. ஆனால், கடைசி நேரத்தில் 12½ லட்சம் டன்னாக குறைத்தது. இருந்தாலும், கரும்பு விளைச்சல் அதிகரித்ததின் காரணமாக சர்க்கரை விலை தொடர்ந்து குறைந்து வருகிறது.*

*கடந்த வாரம் 100 கிலோ எடை கொண்ட ஒரு மூட்டை சர்க்கரை ரூ.2,790 ஆக விற்பனை ஆனது. அது தற்போது, ரூ.2,750 ஆக குறைந்துள்ளது. இதனால், ஒரு கிலோ சர்க்கரை ரூ.30–ல் இருந்து ரூ.29 ஆக விலை சரிந்துள்ளது.*

*இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை சரியான நேரத்தில் பெய்துள்ளதால், குஜராத், ராஜஸ்தான், மராட்டியம், கர்நாடகா, ஆந்திரா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் கரும்பு அதிகம் பயிரிடப்பட்டுள்ளது. இவை அறுவடைக்கு வந்த பிறகு சர்க்கரை விலை மேலும் குறைய வாய்ப்பு உள்ளது.*

*பருப்பு வகைகள்*

*அதிக விளைச்சல் காரணமாக பருப்பு வகைகள் விலை குறைந்து வருகிறது. கடந்த வாரம் 100 கிலோ கொண்ட பாசி பருப்பு (முதல் ரகம்) மூட்டை ரூ.9,400–க்கு விற்பனையானது. அது தற்போது ரூ.8,200 ஆக விலை குறைந்துள்ளது. இதனால், ரூ.97–க்கு விற்பனையான ஒரு கிலோ பாசி பருப்பு ரூ.85 ஆக விலை சரிந்துள்ளது.*

*பாசி பருப்பு 2–வது ரகம் கிலோ ரூ.91–ல் இருந்து ரூ.77 ஆக விலை குறைந்துள்ளது.*

*துவரம் பருப்பு (முதல் ரகம்) 100 கிலோ மூட்டை ரூ.6,900–ல் இருந்து ரூ.6,200 ஆக விலை குறைந்துள்ளது. ஒரு கிலோ துவரம் பருப்பு ரூ.72–ல் இருந்து ரூ.65 ஆக விலை சரிந்துள்ளது. 2–வது ரக துவரம் பருப்பு கிலோ ரூ.68–ல் இருந்து ரூ.61 ஆக விலை குறைந்துள்ளது.*

*மேலும் விலை குறையும்*

*அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளில் இருந்து அதிகம் இறக்குமதி செய்யப்படுவதால், டர்க்கி ரக துவரம் பருப்பு ஒரு கிலோ ரூ.50–ல் இருந்து ரூ.46 ஆக விலை குறைந்துள்ளது.*

*கடந்த மாதம் 100 கிலோ கொண்ட உளுத்தம்பருப்பு மூட்டை ரூ.8 ஆயிரத்திற்கு விற்பனை செய்யப்பட்டது. அது தற்போது ரூ.7,600 ஆக குறைந்துள்ளது. இதனால், ஒரு கிலோ உளுத்தம்பருப்பு ரூ.83–ல் இருந்து ரூ.79 ஆக விலை சரிந்துள்ளது. பர்மா உளுத்தம்பருப்பு கிலோ ரூ.78–ல் இருந்து ரூ.71 ஆக விலை குறைந்துள்ளது.*

*மராட்டியம், கர்நாடகா, குஜராத், ராஜஸ்தான் மற்றும் மத்திய பிரதேசம் மாநிலங்களில் பருப்பு வகைகள் நல்ல விளைச்சல் கண்டுள்ளதால், அடுத்த மாதம் மூட்டைக்கு ரூ.500 முதல் ரூ.1,000 வரை மேலும் விலை குறையும் என்று தமிழ்நாடு அனைத்து மளிகை பொருட்கள் வியாபாரிகள் சங்க தலைவர் எஸ்.பி.சொரூபன் கூறினார்.*

எண்ணெய் வகைகள்

மலேசியா, இந்தோனேசியா ஆகிய நாடுகளில் இருந்து அதிகம் இறக்குமதி செய்யப்படுவதாலும், அமெரிக்கா டாலர் மதிப்பு சரிந்து வருவதாலும் பாமாயில் விலை குறைந்து வருகிறது. கடந்த வாரம் ரூ.46–க்கு விற்பனையான ஒரு கிலோ பாமாயில் தற்போது ரூ.42 ஆக விலை சரிந்துள்ளது.

தென் ஆப்பிரிக்காவில் இருந்து சன் பிளவர் ஆயில் அதிகம் இறக்குமதி ஆவதால், கடந்த வாரம் ரூ.52–க்கு விற்பனையான ஒரு கிலோ சன் பிளவர் ஆயில் தற்போது ரூ.49 ஆக விலை குறைந்துள்ளது.

ரூ.110–க்கு விற்பனையான ஒரு கிலோ அக்மார்க் நல்லெண்ணெய் ரூ.105 ஆகவும், ரூ.65–க்கு விற்பனையான சாதா நல்லெண்ணெய் ரூ.60 ஆகவும் விலை குறைந்துள்ளது. இதேபோல், நயம் தேங்காய் எண்ணெய் ரூ.80–க்கு விற்பனையானது, தற்போது ரூ.70 ஆக விலை சரிந்துள்ளது. சாதா தேங்காய் எண்ணெய் ஒரு கிலோ ரூ.65–ல் இருந்து ரூ.60 ஆக விலை குறைந்துள்ளது. வனஸ்பதி (டால்டா) கிலோ ரூ.55–ல் இருந்து ரூ.50 ஆக விலை இறங்கியுள்ளது.

பூண்டு விலை உயர்வு

அதே நேரத்தில் விளைச்சல் குறைவால் பூண்டு, புளி, ஏலக்காய், முந்திரி பருப்பு விலை அதிரடியாக உயர்ந்துள்ளது. கடந்த வாரம் ரூ.90–க்கு விற்பனையான ஒரு கிலோ பூண்டு (பருவெட்டு) தற்போது ரூ.110 ஆக விலை அதிகரித்துள்ளது. இதேபோல், மலைப்பூண்டு ரூ.150–ல் இருந்து ரூ.180 ஆகவும், சாதா பூண்டு ரூ.60–ல் இருந்து ரூ.80 ஆகவும் விலை உயர்ந்துள்ளது.

கர்நாடகாவில் இந்த ஆண்டு புளி விளைச்சல் குறைந்துள்ளதால், கடந்த வாரம் ரூ.60–க்கு விற்பனையான ஒரு கிலோ புளி (முதல் ரகம்) ரூ.70 ஆகவும், 2–வது ரக புளி ரூ.40–ல் இருந்து ரூ.50 ஆகவும் விலை உயர்ந்துள்ளது.

முந்திரி பருப்பு

ஏலக்காய் ஒரு கிலோ (முதல் ரகம்) ரூ.1,500–ல் இருந்து ரூ.1,800 ஆகவும், 2–வது ரக ஏலக்காய் ரூ.1,200–ல் இருந்து ரூ.1,500 ஆகவும் விலை அதிகரித்துள்ளது. முந்திரி பருப்பு விலையும் (முதல் ரகம்) ஒரு கிலோ ரூ.350–ல் இருந்து ரூ.400 ஆகவும், 2–வது ரக முந்திரி பருப்பு ரூ.300–ல் இருந்து ரூ.350 ஆகவும் விலை அதிகரித்துள்ளது.

இந்த ஆண்டு நெல் விளைச்சல் அதிகரித்துள்ளதால், அரிசி விலை மட்டும் உயராமல் கடந்த வார விலையிலேயே நீடிக்கிறது.

**உளுந்தம்பருப்பு விலை 'கிடுகிடு' உயர்வு அப்பளம் தயாரிப்பாளர்கள் கவலை**

பெரும்பாவூர்,

ஜூலை.12–

கேரளாவில் உளுந்தம்பருப்பு விலை கிடுகிடு என்று உயர்ந்து விட்டது. இதனால் உளுந்தம்பருப்பை வாங்கி அப்பளம் தயார் செய்யும் குறு தொழில் முனைவோர் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

சரக்கு கட்டணம் அதிகரிப்பு

கேரள மாநிலத்தை பொறுத்தவரை உணவு பொருட்களுக்காக பக்கத்து மாநிலமான தமிழ்நாடு,

கர்நாடகாவை தான் நம்பி இருக்க வேண்டிய நிலை இருக்கிறது. சமீபத்தில் பெட்ரோலுக்கு 3 ரூபாயும், டீசலுக்கு 2 ரூபாயும் அதிகரித்தது. இதனால் அனைத்து சரக்கு வாகனங்களின் கட்டணங்களும் உயர்த்தப்பட்டன.
வியாபாரிகள் சரக்கு வாகனங்களுக்கு அளிக்கப்படும் வாடகை தொகை, சரக்குகளில் மீது ஏற்றி வசூல் செய்ய தொடங்கி இருக்கிறார்கள். இதனால் அனைத்து உணவு பொருட்களின் விலையும் தாறுமாறாக அதிகரித்து உள்ளது. எந்த காய்கறியை எடுத்தாலும் ஒரு கிலோ 20 ரூபாய்க்கு மேல் தான் விற்கப்படுகிறது.
உளுந்தம் பருப்பு விலை உயர்வு
கேரளாவில் கடந்த சில மாதங்களாக உளுந்தம்பருப்பு கிலோ 40 ரூபாய்க்கு விற்றது. ஆனால் இப்போது உளுந்தம்பருப்பின் விலை 90 ரூபாய் ஆகும். உளுந்தம்பருப்பின் விலை 2 மடங்கு அதிகரித்து உள்ளதால் அதை நம்பி அப்பளம் தயாரிக்கும் தொழிலாளர்கள் கவலை அடைந்து உள்ளனர்.
அதே போல் அப்பளம் தயாரிக்கும் காரம், உப்பு, எண்ணை விலையும் உயர்ந்து உள்ளது. 20 முதல் 30 சதவீதம் விலை அதிகரித்து விட்டது. எர்ணாகுளத்தில் 1500 குடும்பங்கள் அப்பளம் தயாரித்து விற்று வருவதை ஒரு குடிசை தொழிலாக செய்து வந்தது. ஆனால் இந்த விலையேற்றத்தால் இப்போது 300 குடும்பங்கள் தான் அப்பளம் தயாரித்து விற்று வருகிறது. மற்ற குடும்பத்தினர் வேறு தொழிலுக்கு இடம் பெயர்ந்து உள்ளனர்.
இது குறித்து அப்பள தயாரிப்பாளர்கள் சங்க நிர்வாகி அணில்குமார் கூறியதாவது:–
பிழைப்பு நடத்த முடியாத சூழ்நிலை
பெட்ரோல், டீசல் விலை உயர்வால் அனைத்து உணவு பொருட்களின் விலையும் அதிகரித்து விட்டது. இதனால் முன்பு கிலோ 40 ரூபாய்க்கு கிடைத்த உளுந்தம்பருப்பு இப்போது 90 ரூபாய். அதோடு அப்பளம் தயாரிக்கும் காரம், உப்பு, எண்ணை போன்றவைகளும் விலை அதிகரித்து விட்டது.
முன்பு எங்களை போன்ற அப்பள தயாரிப்பாளர்களுக்கு உளுந்தம்பருப்பு வாங்க மானியம் வழங்கி வந்தது. ஆனால் இப்போது அதை நிறுத்தி விட்டது. இதனால் உளுந்தம்பருப்பை வெளிசந்தையில் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டி நிலை இருக்கிறது.
அதோடு வாடிக்கையாளர்களும் அப்பளம் அளவை குறைக்க கூடாது என்று விரும்புகிறார்கள். அதிக விலை கொடுத்து வாங்கவும் விரும்பவில்லை. இதனால் இதை நம்பிய 1200 குடும்பத்தினர் நஷ்டம் அடைந்து வருந்துவதை விட வேறு தொழில் செய்து பிழைக்கலாம் என்று மாற்று தொழிலுக்கு சென்று விட்டனர்.
இப்போது 15 எண்ணிக்கை கொண்ட அப்பளம் 10 ரூபாய்க்கு கடையில் விற்கப்படுகிறது. முன்பு 25 எண்ணிக்கை கொண்ட அப்பளம் 10 ரூபாய் விற்றோம். இந்த அப்பள தொழிலை காப்பற்ற மாநில அரசு மீண்டும் மானியம் வழங்கி, அப்பள தயாரிப்பாளர்களுக்கு கடன் வழங்கி உதவ வேண்டும்.
இவ்வாறு அவர் கூறினார்.

**அடுத்த 10 ஆண்டுகளில் இறக்குமதி மேலும் உயரும் சமையல் எண்ணெய் பற்றாக்குறை 1.77 கோடி டன்னாக அதிகரிக்கும்**

அடுத்த 10 ஆண்டுகளில் உள்நாட்டில் சமையல் எண்ணெய்க்கான பற்றாக்குறை 1.77 கோடி டன்னாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, சென்ற 2009 காலண்டர் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மொத்த சமையல் எண்ணெய் இறக்குமதியைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமாக இருக்கும்.
இறக்குமதியில் முன்னிலை
ஏற்கனவே நம் நாடு சமையல் எண்ணெய் இறக்குமதியில் முன்னிலை வகித்து வருகிறது.

*இந்நிலையில் இனி வரும் ஆண்டுகளில் சமையல் எண்ணெயை மேலும் அதிமாக இறக்குமதி செய்ய வேண்டிய நிலை உருவாகும் என்று கூறப்படுகிறது.*

*இதே போன்று, எதிர்காலத்தில் சர்க்கரைக்கான பற்றாக்குறை சுமார் 4 கோடி டன்னாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, சென்ற ஆண்டின் பற்றாக்குறையை விட 5 மடங்கு அதிகமாகும். சர்க்கரை, நெல், கோதுமை மற்றும் பருத்தி உற்பத்தியில் முன்னணி நாடுகளுள் ஒன்றாக நம் நாடு உள்ளது. அதே சமயம் இவற்றுக்கான பயன்பாடும் அதிகமாகவே உள்ளது.*

*மக்கள்தொகை*

*நாட்டின் பொருளாதாரம் சிறப்பான அளவில் வளர்ச்சி கண்டு வருகிறது. அதே சமயம் அதிகரித்து வரும் மக்கள்தொகை அரசுக்கு ஒரு சவாலாக உள்ளது. இதனால் உணவுப் பொருள்கள் இறக்குமதி, நீண்ட கால அடிப்படையில், அதிகரிக்க வாய்ப்புள்ளது. கடந்த பல மாதங்களாக நம் நாட்டில் உணவுப் பொருள்களுக்கான பணவீக்க விகிதம் மிகவும் அதிகமான அளவில் இருந்து வருகிறது.*

*பணவீக்கமும், மக்கள்தொகைப் பெருக்கமும் இதே அளவில் உயர்ந்து வருமானால் அடுத்த சில ஆண்டுகளிலேயே நம் நாடு சமையல் எண்ணெய், சர்க்கரை மற்றும் உணவு தானியங்கள் இறக்குமதியில் முன்னணி நாடாக உருவெடுக்கும். ஆண்டுதோறும் பருவமழை நன்கு இருந்து உணவு உற்பத்தி சிறப்பான இருந்தாலுமே இறக்குமதியை சார்ந்திருக்கும் நிலை தவிர்க்க இயலாதது என பொருளியல் வல்லுனர்கள் கூறுகின்றனர்.*

*14 சதவீதம் உயரும்*

*நடப்பு 2009–10–ஆம் ஆண்டு எண்ணெய் பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) நம் நாட்டில் சமையல் எண்ணெய் இறக்குமதி, மதிப்பின் அடிப்படையில் 14 சதவீதம் அதிகரித்து ரூ.32,000 கோடி மதிப்பிற்கு உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. உள்நாட்டில் உற்பத்தி சற்று தேக்கம் அடைந்துள்ள நிலையில், தேவைப்பாடு அதிகமாக உள்ளதே இதற்கு முக்கிய காரணமாகும். சமையல் எண்ணெயைப் பொறுத்தவரை, நம் நாடு கடந்த 1994–95–ஆம் ஆண்டு பருவத்தில் 5 சதவீதமே இறக்குமதியை சார்ந்திருந்தது. இது, தற்போது 50 சதவீதமாக உயர்ந்துள்ளது என சமையல் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. சென்ற ஆண்டு செப்டம்பர் மாதத்துடன் நிறைவடைந்த முந்தைய பருவத்தில் ரூ.28,000 கோடி மதிப்பிற்கு சமையல் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.*

***'கார்பைடு' மூலம் பழுக்க வைக்கப்பட்ட 355 கிலோ மாம்பழங்கள் பறிமுதல் கோவை மாநகராட்சி அதிகாரிகள் நடவடிக்கை***

*கோவை,ஜூலை.12–*

*'கார்பைடு' கற்கள் மூலம் பழுக்க வைக்கப்பட்ட 355 கிலோ மாம்பழங்களை கோவை மாநகராட்சி அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.*

*அதிகாரிகள் சோதனை*

*கோவையில் உள்ள பழக்கடைகளில் 'கார்பைடு' என்ற வேதிக்கற்கள் மூலம் பழங்கள் பழுக்க வைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதாக ஏராளமான புகார்கள் வந்தன. இதைதொடர்ந்து கோவை மாநகராட்சி நகர் நல அலுவலர் அருணா மற்றும் சுகாதாரத்துறை அதிகாரிகள் உக்கடம் பைபாஸ் சாலையில் உள்ள ஒரு பழக்கடைக்கு சென்றனர்.*

*அப்போது அந்த கடையில் இருந்தவர்கள் அதிகாரிகளை உள்ளே வர விடாமல் தடுத்தனர். இதுகுறித்து மாநகராட்சி அதிகாரிகள் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். அதன்பேரில் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று பாதுகாப்பு அளித்தனர்.*

*355 கிலோ மாம்பழங்கள் பறிமுதல்*

*அதன்பின்னர் மாநகராட்சி அதிகாரிகள் அந்த கடையில் சோதனை நடத்தினார்கள். அப்போது கார்பைடு கற்களை வைத்து மாம்பழங்களை பழுக்க வைத்தது கண்டுபிடிக்கப்பட்டது.*

இதைதொடர்ந்து அந்த ஒரு கடையிலிருந்து 355 கிலோ மாம்பழங்களை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். இவற்றின் மதிப்பு சுமார் ரூ.20 ஆயிரம் ஆகும்.
அதன் பின்னர் மாநகராட்சி அதிகாரிகள் கருப்பண்ண கவுண்டர் வீதியில் உள்ள பழக்கடைகளுக்கு சென்றனர். அங்கு 'அசிட்டிலீன்' என்ற வாயு மூலம் வாழைப்பழம், சாத்துக்குடி பழங்களை பழுக்க வைக்கிறார்களா என்று அதிகாரிகள் சோதனை செய்தனர். ஆனால் அது போன்று பழங்களை பழுக்க வைக்கவில்லை என்பது தெரியவந்தது. மாநகராட்சி அதிகாரிகளின் திடீர் சோதனையினால் டவுன்ஹால் பகுதியில் உள்ள பழக்கடைகளில் பரபரப்பு நிலவியது.

**குருணை வடிவ யூரியாவை பயன்படுத்தி அதிக மகசூல் பெறுங்கள் விவசாயிகளுக்கு, வேளாண் உதவி இயக்குனர் அறிவுரை**

கோவை,ஜூலை.12–
விவசாய பயிர்களுக்கு குருணை வடிவ யூரியாவை பயன்படுத்தி அதிக மகசூல் பெறவேண்டும் என்று விவசாயிகளுக்கு வேளாண் உதவி இயக்குனர் அறிவுரை வழங்கி உள்ளார்.
குருணை வடிவ யூரியா
குருணை வடிவ யூரியாவை பயிர்களுக்கு இடும்போது பயிர் பச்சை பிடிப்பது சிறிது காலதாமதம் ஆவதால் குருணை வடிவ யூரியாவைவிட சாதாரண யூரியாவையே அதிக அளவில் விவசாயிகள் விரும்புகின்றனர். ஆனால் குருணை வடிவ யூரியாவில் தான் அதிக பலன் உள்ளது.
இது குறித்து கோவை வேளாண்மை இணை இயக்குனர் நடராஜ் மேலும் கூறியதாவது:–
குருணை வடிவ யூரியாவில் உள்ள தழைச்சத்து, மிகவும் மெதுவாகவும், சீராகவும் நீண்டநாட்களுக்கு பயிர்களுக்கு கிடைக்கிறது. இதனால் பயிர் நீண்ட நாட்களுக்கு பசுமை மாறாமல் இருக்கும். தழைச்சத்து பயன்படுத்தும் அளவும் குறைகின்றது.
சாதாரண யூரியாவினை மண்ணில் இடும்போது உடனடியாக கரைவதால் தழைச்சத்து நீரின் மூலமாகவும், ஆவியாதல் மூலமாகவும் வீணாகிறது. குருணை வடிவ யூரியாவை பயிர்களுக்கு இடும்போது தழைச்சத்து வீணாகாமல் பயிர்களுக்கு கிடைக்கின்றது.
கூடுதல் மகசூல்
யூரியா குருணை வடிவில் இருப்பதால் பயிர்களுக்கு தெளிப்பது மிகவும் எளிதானது. குருணை வடிவ யூரியாவில் ஈரப்பதம் குறைவாக இருப்பதால் கட்டியாவது இல்லை. திறந்து வைத்திருக்கும் நிலையில் காற்றில் உள்ள ஈரப்பதத்தை உறிஞ்சி தண்ணீராக மாறுவதும் இல்லை. குருணை வடிவ யூரியாவினை சேமிப்பதற்கும், உபயோகிப்பதற்கும் எந்தவித சிரமமும் இல்லை. குருணை வடிவ யூரியா சாதாரண யூரியாவை விட எடை அதிகமாக இருப்பதால் பயிர்களுக்கு இடும்போது காற்று மற்றும் நீரினால் அடித்து செல்லப்படுவது இல்லை.
ஆனால் சாதாரண யூரியா துகள்களாக இருப்பதால் இலையின் மேற்பரப்பில் படிந்து பயிர்களுக்கு சேதத்தினை ஏற்படுத்துகிறது. ஆகவே அதிக பயன் உள்ள குருணை வடிவ யூரியாவை பயன்படுத்தி விவசாயிகள் கூடுதல் மகசூல் பெற வேண்டும்.
இதுபோன்று டி.ஏ.பி மற்றும் காம்ப்ளஸ் உரங்களை வாங்கும்போது குறிப்பிட்ட உர நிறுவனத்தினை மட்டுமே கேட்டு வாங்காமல் அனைத்து நிறுவனங்களின் உரங்களையும் வாங்கி பயன்பெற வேண்டும். அனைத்து நிறுவன உரங்களின் தரம், சத்துக்கள் ஒரே அளவில்தான் உள்ளது.
இவ்வாறு அவர்கூறினார்.